உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௨௪] அக்ஷய ஹு சித்திரைமீ [பகுதி ௬.

Vol. XXIV. April-May-1926. No. 6.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

௧எ௯ [~~௬எ௰ம்~~ பக்கத் தொடர்ச்சி.]

272. "ஆகாத தன்றால், உனக்கவ்வனம், இவ்வயோத்தி;
மாகாதல் இராமன் நம் மன்னவன் வையம் ஈந்தும்;
போகா உயிர்த் தாயர் நம் பூங்குழற் சீதை; யென்றே
ஏகாய்: இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்" என்றாள்.

இ-ள். (அப்போது, சுமித்திரை, 'ஏகுக' என்னும் தன்சொல்லே துணையாமென்ற இராமனுக்குச், சொற்றுணையிலும் எத்துணையோ சிறந்த பெருந்துணையாகத் தன் உயிரினுமினிய அரும்பெறற்புதல்வனையே அளிப்பாளாய், இலக்குமணனைநோக்கி "இராமனுக்கு ஆகும்) வனம் உனக்கு ஆகும்; (அது) அயோத்தியாம்: இராமன், மன்னவ (னாகிய தசரத)னும்: சீதை தாயாம்: என்றுகருதி (வனத்துக்கு இராமனுடன்) ஏகுவாயாக. இனி இவ்விடத்தில் (தாமதித்து) நிற்றலே குற்றமாம்" என்றாள்.

'ஆகாதது', 'அன்று' என்ற இரண்டு எதிர்மறைகள் இணைந்து 'ஆகும்' என்ற ஓர் உடம்பாட்டுப் பொருளை உணர்த்தின. ஆல் அசை. அவ்வனம் என்பதில் உள்ள அகரச்சுட்டு, வனம் தூரத்தில் உள்ளதென்பதைஉணர்த்தி நின்றது. மா காதல் இராமன்—(எல்லாரிடத்தும்) பேரன்புடைய இராமன்; இலக்குமியின் காதலையுடைய இராமன். வையம்

ஈந்தும் நாம் மன்னவன்—பூமியை (இராமனுக்குக்கொடாமற் பரதனுக்கு)க் கொடுத்தானாயினும் நமக்கு அரச (னாயிருத்தலினின்றும் நீங்காதவ) னாகிய தசரதன். போகா உயிர்த் தாயர்—(கணவன் இறத்தல் கண்டும்) போகாத உயிரையுடைய (மூன்று) தாய்மார் (சேர்ந்தாளுற்போன்றதாய்). வயின்—இடம். ஏதம்—குற்றம். 'இராமனம் மன்னவன்' என்பதை 'இராமன் அம் மன்னவன்' எனப் பிரித்தால், அகாச் சுட்டு, பலாறி சுட்டாம்.

சீதை வனஞ் செல்வதாக இதுவரை கூறப்படவில்லையாயினும், அவள் இராமனைப் பிரிந்துவாழாள் அவனுடன் வனஞ்சென்றே தீர்வா ளென்ற துணிவினல், 'அவளைத் தாய்போலக் கருதிப் பேணுவாயாக' வென்று அவள் மனநிலையை நன்குணர்ந்த சுமித்திரை சொன்னா ளென்க. இவ்வாறு மேல் "நானும் சீதையும் ஆருளரெனினுளம்" என்னும் இலக்குமணன்கூற்றுள்ளும் காண்க.

இப்பாட்டின்மூலமான வான்மீகிசுலோகத்துக்குப் பலவகை யாகப் பொருள் கூறுதலுண்டு அச் சுலோகத்தின் முதல் மூன்றடிகளே அவ்வாறு பலபொருள்கூறுதற் கிடந்தந்துநிற்பன ஈற்றடிக்குப் பொருள்வேறுபாடில்லை. மூலத்தின் முதல் மூன்றடிகளின் முக்கி யார்த்தங்கள் முழுதும் மொழிபெயர்ப்பின் முதல் மூன்றடிகளில் (முன் பின் மாறி) உள்ளன வென்பதை இரண்டையும் ஒத்திட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்க. மேலேகூறிய பலபொருள்கள், மூலத்துக்குப்போலவே மொழிபெயர்ப்புக்கும் பொருந்தியிருத்தல் காணலாம்.

ஷை சுலோகத்துக்குப் பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷி ணாத்யகலாநிதி சாமிநாதையரவர்கள், பிரம்மஸ்ரீ தி. நாராயணையங்கா ரவர்கள், ராசஸ்ரீ மே. சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் ஆகிய இவர்கள்வாயிலாகக் கிடைத்த பொருள்களினின்று தெரிந்தெடுத்து வேண்டிய வேறுபாடு செய்யப்பெற்றவை பின்வருவன அப்பொருள்கள் மூலத்தோடு (எனவே, மொழிபெயர்ப்பினோடும்) பொருந்துமாறு தெரிந்துகொள்ளுதற்கு, மூலசுலோகத்தின் முதல் மூன்றடிகளே வேண்டுவனவாதலின், அவற்றைமட்டும் தமிழில் எழுதித்தருகின்றேன்:-

ராமம் தசரதம் வித்தி
மாம் வித்தி ஜனகாத்மஜாம்
அயோத்தியாம் அடவீம் வித்தி

இதன் வெளிப்படைப்பொருள்:—

இராமனைத் தசரதனுகக்கருது; சீதையை யானுகக்கருது; காட்டை அயோத்தியாகக் கருது என்பதாம்.

குறிப்புப்பொருள்கள்:—

(1) இராமனைத் தந்தைபோல நன்மைசெய்வானுகவும், சீதையைத் தாய்போல அன்புள்ளவளாகவும், காட்டை அயோத்திபோல வசிக்கத்தக்கதாகவும் கருது.

(2) சீதையையும், ராமனையும், தாயும், தந்தையுமாகக் கொண்டு பூசித்துப் போற்றுவாயாக. காட்டை அவர்கள் உறையும் மேன்மை பற்றி அயோத்தியாக மதித்து வாழ்வாயாக.

இயல்பான இவ் விரு பொருள்களுள் ஒன்றேனும் இரண்டுமேனும் வான்மீகிகருத்தாயிருந்திருக்கலாம். பின்வரும் பிற பொருள்களெல்லாம், உரைகாரர் மதிவன்மையாலும் புலமைத் திறமையாலும் உய்த்துக் கொண்டுரைத்த ஆரோபித அருத்தங்கள்போலும்; (அதாவது,—அப் பொருள்கள், குகப்படலம் கூறும் பாட்டில் "சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கி—'வெற்றித்தார்க் குரிசில்! இவர் ஆர்?' என்று குகன் வினவ, 'வேந்தர்வைகும்—முற்றத்தான் முதற் றேவி, மூன்றுலகம் ஈன்றானை முன் ஈன்றானைப்—பெற்ற'" வள் எனபதில் உள்ள 'வேந்தர் வைகும் முற்றத்தான முதல்தேவியாதலால் சுற்றத்தார் தொழுகின்றார்கள்; மூன்று உலகம் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றவளாதலால், தேவர் தொழுகின்றாகள்' என்ற (கம்பர் நிச்சயமாகக்கருதிய) குறிப்புப் பொருள் போன்றனவல்ல: மற்று, மாரீசன்வதைப்படலத்தில், சூர்ப்பநகை இராவணனைநோக்கிக்கூறும் "இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன் தன—தந்தையும் உமையைப் பெற்றான்; தாமரைச் செங்கணானும்—செந்திரு மகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்:—அந்தாம் பார்க்கின், நன்மை அவர்க்கில்லை உனக்கே ஐயா!" என்றபாட்டில் 'நன்மை அவர்க்கில்லை உனக்கே' என்பதற்கு 'நன்மை அவாக்கு (உண்டு) உனக்கு இல்லை' என்று கூறப்படுகின்ற—சூர்ப்பநகை நினையாததும் கம்பர் கருதியதோ கருதாததோ வென்று சந்தேகிக்கத்தக்கதுமான—குறிப்புப்பொருள்போன்றன,—என்புதாம்.)

உயர்ந்தோரது வாக்கியங்கள், அவர்கள் உணர்த்தக் கருதிய ஒண்பொருளை நன்குணர்த்துதலோடு, வேறு விழுமிய பொருள்களும் பயக்குமென்பதற்கு, மேற்குறித்த சுலோகம், சிறந்ததோருதாரணமாதல் காண்க.

(3) இராமனைத் திருமாலாகவும், சீதையைத் திருமகளாகவும், வனத்தை வைகுண்டமாகவும் கருது.

'இராமனைத் திருமாலாக' என்பதற்குப் பொருந்த, 'இராம னம் மன்னவன் வைய மீந்தும்' என்ற கம்பர் பாட்டுப் பகுதியை 'இராமன் வையம் ஈந்தும் அ மன்னவன்' எனப் பிரித்துப் பொருத்தி, 'இராமன், (திருமாலின் அவதார புருடனுயிருந்தலேயன்றி, அத்திருமால் உயிர்கள் உய்ந்து கடைத்தேறித் தன் திருவடி யடைதற்குச் சாதனங்களான தநுகரண புவன போகங்க ளடங்கிய உலகத்தை நான்முகனைக்கொண்டு படைப்பித்து அவ் வுயிர்களுக்குக் கொடுத்ததுபோலத், தசரதன் தனக்குக் கொடுத்த) உலகத்தைப் (ப் பரதனுக்கு)க் கொடுத்தும் திருமாலாகிய இறைவனாகவும்' எனப் பொருள் கொள்ளலாம். [ அ—விட்டுணு (சங்க அகராதி). மன்னவன்—எப்பொருட்கும் இறைவன் (ஷ) ]

'சீதையைத் திருமகளாகவும்' என்பதனோடியையச் 'சீதை போகா உயிர்த் தாயர்' என்பதற்குச் 'சீதை, (அழிந்துபோகும் உன் உடலுக்குத் தாயான என்னினும் சிறந்த தாயாய், அழிந்து) போகாத (உன்) உயிர்க்குத் தாய் ஆன திருமகள், எனப் பொருள் கூறலாம். இப்பொருள் கொள்ளுமிடத்துத் 'தாயர்' ஒருமைகுறித்த மரியாதைப் பன்மையாம்.

(4). (உன்பிதாவான) தசரதனை யிறந்தவனாகவும், (உன் தாயான) என்னை இறவாது தந்தையிடம் உள்ள மகளாகவும் (அதாவது கணவனுக்கு மனையாளா யுடனிறவாமலும் மகனுக்குத் தாயா யுடனுறையாமலும் அகன்றமையால் என்பதாம்), இவ் வயோத்தி நகரத்தைக் காடாகவும் கருது.

(1), (2), (3) ஆகியபொருள்கள் இராமனைப் பற்றுதற்கும் (4)-ம் பொருள் அயோத்தியை விடுதற்கும் உபாயமாகக் கூறியனவாகக் கொள்ளலாம்.

(5) தசரதன் இறப்பது திண்ணமாதலால், இராமனே தசரதன் தானத்தில் அரசனாவானென்றும், தசரதன் சாவால் நானும் மற்றுமுள்ள

உன் தாய்மாரும் அரசியாயுள்ள தன்மையை இழப்பேமாதலால், சீதையே அரசியாவாளென்றும், அரசு புரிதற்குரிய நாடில்லையே யென்றெண்ணுமல், "இராம னிருந்த இடம் அயோத்தி" என்றவாறு அவன் வசித்தற் கிடமானதனால் காடே நாடாமென்றும் தெரிந்துகொள். ("புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போமென்ருர்". நகர்நீங்குபடலம் - ககக

(6) தசாதன், தான் ஆண்ட மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்குப் போய்விடுதலால், அவனை விட்டு விலகி இராமனைச்சேர்ந்த இராச்சிய லக்குமியாகச் சீதையையும் அவ் விலக்குமியின் நாயகனாக இராமனையும் கருது. அந்த இராச்சிய லக்குமியின் நிலைக்களமான (அதாவது சீதை-இராமனுடன்-வாழு மிடமான) காடு பிற அரசர் யுத்தஞ்செய்து வெல்ல இயலாததா (ய் அயோத்தியா) மென்று கருது. (அயோத்தி—யுத்தத்தால் வென்று அடையக்கூடாதது).

சுமித்திரை தான அறியாமலே வருவதறிவிப்பாளாய்க்குறிப்பித்ததாகக்கொள்ள உள்ளது இனிவரும ஏழாம்பொருள்.

(7) இராமன் தசாதன் தன்மையன் என்றும் (அதாவது தசாதன் மண்ணைவிட்டு விண்ணுறுதல்போல இராமன் நாட்டைவிட்டுக் காட்டை அடைவான் என்றும், அவன் பெண்டாட்டிக்குப் பாதந் திரணுக்கைகேயி சொற்கேட்டுத்துன்புற்றதுபோல இவனும் சீதைசொற்கேட்டு மாய மான்பின் சென்று மனைவியைப்பிரிந்து வருந்துவானென்றும்). சீதை என் தன்மையளென்றும் (அதாவது என்னால் நீ நாட்டைவிட்டுக் காட்டுக்குச்செல்வது போல அவளால் காட்டைவிட்டுக் கடலுக்குச் செல்வாயென்றும்). ஆரணியம் அயோத்தியின் தன்மையது. அதாவது நீங்கள் மூவரும்வாழ்ந்த அயோத்தி நீங்கள் காடுசெல்வதால் உங்களைப் பிரிந்து பாழ்படுதல்போல நீங்கள் வாழ்ந்தகாடு, நீங்கள் இலங்கையை அடைதலால் உங்களைப்பிரிந்து வெறிதாமென்றும் தெரிந்துகொள்.

[சுமித்திரை இலக்குமணனை நோக்கிப் பின்னுங் கூறுவாள். "நீ, இவன் தம்பிபோலன்றி, அடியார்போலப் பணிவிடை செய்: இவன் அயோத்திக்குத் திரும்பிவருவானானால், நீயும்வா: அன்றேல், அவனுக்கு முன், உயிர்விடு" என்ருள். இருவரும் அவளைத் தொழுது விடை பெற்று மரவுரி உடுத்துப் புறப்பட்டார்கள். தம்பியும் தன்னைப் போலச் சீரை தரித்ததைக் கண்டு, இராமன், அவனை நோக்கி "யான் சொல்வதை மறுக்காமற் கேள். தந்தையுந் தாயரும் முன்னையநிலையினால்லர்.

என்னைப் பிரிந்து துன்புற்றிருக்கின்றனர். உன்னையும் பிரிந்து அதிகத் துன்பட அடையாமல், நீ, எனக்காக, அவர்களுக்கு உதவியாயிரு” என்றான். இலக்குமணனை “நீ இந்தக் கொடியவார்த்தை கூறும்படி நான் உனக்குச் செய்த குற்றம் யாது? என்று பினனும் கூறுவான்.]

273. “நீர் உள எனின், உள, மீனும் நீலமும்;
பார் உள எனின், உள, யாவும்; பார்ப்புறின்;
நார் உள தனு உளாய்! நானும் சீதையும்,
ஆர் உளர் எனின், உளேம்? அருளுவாய்” என்றான்.

இ. ள். “நீருண்டேல் (அன்றோ) மீனும் நீலமலரும் (உயிரோடு) உள்ளனவாம்; (அந்நீருக்கு நிலைக்களமாய்த் தமக்கு ஆதாரமான) பூமியிருந்தால் (அன்றோ, அதனால் தாங்கப்பெற்றிருக்கின்ற சராசரப் பொருள்கள்) எல்லாம் இருப்பனவாம்; யானும் சீதையும் யார் (பிரியாமல்) இருந்தால், (உயிரோடு) இருப்பேம்? (அது நீயன்றோ? எங்களுக்கு நீபிரிதல் உயிர்பிரிதலன்றோ?) கூறுவாயாக” என்றான்.

‘நீர் உளது’ ‘பார் உளது’ என்பன துவ்விகுதி கெட்டுநின்றன. ‘நீர் (இடங்கள்) உள,’ ‘பார் (இடங்கள்) உள’ என்றுமாம். பார்ப்புறின் (ஆலோசித்துப்) பார்த்தால். நார்—நாண். அருளுதல்—சொல்லுதல் (சங்க அகராதி).

‘நீரும் பாரும்’ இராமனுக்கு உவமானங்களாகவும், ‘யாவும்’ இலக்குமணன் சீதை யிருவருக்கும் பொதுவான உவமானமாகவும், மீனும் நீலமும் முறையே இலக்குமணனுக்கும் சீதைக்கும் சிறப்பான உவமானங்களாகவுங் கொள்ளலாம். இதற்குப் பொருத்தமாக, ‘நானும் சீதையும்’, ‘மீனும் நீலமும்’ வரிசையாக வருதலையும், இதனடியிற் கூறப்படும் உவமேயப் பொருள்களிடையே உள்ள வேற்றுமைகள் உவமானப்பொருள்களிடையே உள்ளவேற்றுமைகளோடொத்திருத்தலையும் கண்டுகொள்க. அவ்வேற்றுமைகள் வருமாறு:— மீன், கெட்டநாற்றமுடைமை, (தன் இனத்தில் சுறுமீன்போன்ற வலியமீன்களுடைமையால்) வன்மை, தூய்மையின்மை முதலிய தன்மைகளால் வெறுக்கப்படுவது; நீலமலர் நறுநாற்றம், மென்மை, தூய்மை முதலியவைகளால் விரும்பப்படுவது: மீன், நீலமலரினும் நெடுங்காலம் நீருடன்கூடியிருப்பது: நீரைப்பிரிந்தால் நீலமலர் வாடிப் பட்டுவிடும்நேர அளவினும் குறைந்த நேர அளவில் மீன் இறந்துபட்டுவிடுவது.

[இலக்குமணன், இராமனை நோக்கிப் பின்னும் கூறுவான். "உலகத்தோ ரெல்லோரும் உயிர்குலைந்து நடுங்கும்படி உன்னைக் காட்டுக் கேகச் சொல்லி உன்னைப் பிரிந்து உயிர் தரித்திருக்கும் தந்தைக்கு மைந்த னென்பதற்குத் தக்க கொடுஞ்சொற் கூறினாய்! இக்கூற்று, உன்னைக் காட்டுக்கோட்டல்கேட்டு எனக்குண்டான கோபத்தைத், 'தணிப்பாயாக' வென்று நீ ஆணையாற் கூறிய கூற்றினுங் கொடுங் கூற்று".]

274. "செய்துடைச் செல்வமோ, யாதும் தீர்ந்தெனைக்
கைதுடைத் தேகவும் கடவையோ? ஐயா!
நெய்துடைத் தடையலர் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் வயம் கொள் வேலினாய்."

இ. ள். "ஐயனே, (துரு ஏறாமல்) நெய்தடவப்பட்டுப் பகைவர் (நெஞ்சுட் பாய்ந்து உயிரைப்போக்கி அதனால் அவர்)களுடைய அன்பு டைய பெண்டிர் கண் (ணிலிட்ட) அஞ்சனத்தை (அவர்கள் கணவ ரிறந்ததற்கிரங்கியழுங் கண்ணீரால் கரையச்செய்து) நீக்கி (மாறிக் கொல்லுதற்கு வேறு பகைவரில்லாமையால் மீண்டு) உறையுட்புகுகின்ற வெற்றிபொருந்திய வேலாயுதத்தை யுடையவனே, (உன் முன்னோரால்) உண்டாக்கப்பட்டு நீ பிறப்புரிமையால்) உடைய செல்வப் பொருள் (கள் எவ்வெவை) களோ (அவ்வவற்றுள் ஒன்று மொழியாமல்) எதனை யுங் கைவிட்டு (ப் போய்விடும்படி தசாதனது ஆணையாற் கடமைப் பட்டிருக்கின்றாயென்றாலும்) என்னைக் கைவிட்டுப் போகவும் (அவன் ஆணையால்) கடமைப்பட்டிருக்கின்றாயோ?"

இப்பாட்டின் முதலிரண்டடிக்கு 'நீ பரசுராமனைவென்றமையால் உனக்கேயுரியதாக நீ 'ஸ்வயார்ஜிதமாகப் படைத்த செல்வத்தைப் பிறர் சொற்படி இழக்கவேண்டுமென்பது நியாயமில்லை; ஆனால் உன்னிஷ்டப்படி செய்யலாமானாலும் செய்துடைச் செல்வமாகாமல் இயற்கையானமைந்த உடைமையாகிய என்னை யிழத்தல் எவ்வாறு இயலும்' என்ற பொருள் பிரமஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் தெரிவித்தது.

செய்து—உண்டாக்கி ('செய்கபொருளை' என்ற குறளுரை பார்க்க). உடை—உடைய என்பதன் விகாரம் கை, துடைத்து, என்ற இரண்டு சொற்களாலாய தொடர், ஒருசொல்நீர்மையதாய், 'அறவேநீக்கி' யென்ற பொருள்படநின்றது. அசுத்தப்பொருளைக் கைப்பற்றியிருந்து பின்பு நீக்கினார், நீக்கப்பட்டபொருள் சற்றேனும் ஒட்டியுள்ளதை நீக்கக்,

கைதுடைத்து, அப்பொருளை அறவே நீக்குதல்போல, 'என்னை வெறுத்து முற்றும் நீக்கி' யென்பான் 'எனைக் கைதுடைத்து' என்றா னென்க. கடவையோ—கடப்பாடாக உடையையோ.

'எமைக் கைதுடைத்து' என்றும் 'மறங்கொள்வேலினாய்' என்றும் பாடங்கள் உண்டு.

கவி, இலக்குமணனைச் சொல்விக்கக்கருதியது முற்றும் முன்னிரண்டடியோடு சொல்லப்பட்டு முடிந்துவிடவே, பின்னிரண்டடிகளை இனிது நிரப்பிய நயம் பெரிதும் பாராட்டற்பாலது. இவ்விரண்டடிகளை அலங்கரிக்கும் வேல்வருணனை வெகு விசித்திரமானது.

[மேற்கூறியவாறு இலக்குமணன்கூற, இராமன் மறுமொழிகூற மாட்டானாய், அவன்முகத்தை நோக்கி, அவன் துன்பமிகுதியைக் கண்டு, தானும் துன்புகூர்ந்து, கண்ணீர் சோர்ந்து நிலத்திற்பெருக நிற்கும்போது, இராசசபையிலிருந்து வசிட்டன் வந்தான். வந்தவன் அவர்கள் வதனத்தை நோக்கி அவர்கள் மனக்கருத்தை யுணர்ந்து மரவுரிவனைந்திருத்தலையுங் கண்டு மிக்க துக்கமுற்று அறிவுகலங்கினான்.]

275. வாழ்வினை நுதலிய மங்கலத்துநாள்,
தாழ்வினை யதுவரச், சீரை சாத்தினான்:
சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்,
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?

இ-ள். (இராமன், மகுடம் புனையும் அரச) வாழ்க்கைக்குக் குறித்த சுபதினத்திலேதானே, (வாழ்வுபோய்த்) தாழ்வுறு (தற்குரிய போகூழ்) வினை(ப் பயன்) வந்தடைய, (நாட்டுவாழ்க்கைவிட்டுக் காட்டு வாழ்க்கைபற்றிப் பொன்னுடையைக் களைந்து) மரவுரியைப் புனைந்தான்: (தமக்கு வாற்பாலதாய ஊழ்வினைப்பயனை வாராமல் தடுத்தற்குத்தக்கதோர்) உபாயத்தை(த் தமக்குத் துணையாக)ப் பிரமதேவனே ஆலோசித்(துச்செய்) தாலும், (அந்த) ஊழ்வினை(ப் பயன் யாவர்) ஒருவராலும் ஒழிக்கப்படுந்தன்மையதோ?

'வாழ்வினுக்கு' எனற்பாலது எதுகைநோக்கி உருபுமயக்கமாய் 'வாழ்வினை' எனப்பட்டது. நுதலல்-குறித்தல். சீரை-மரவுரி. சூழ்வு-உபாயம். ஊழ்-விதி. 'மங்கலத்தினாள்' 'ஒருவற்சூழினும்' என்றும்

பாடங்கள் உள: இந்தப்பாட்டு அடுத்தபாட்டில்வரும் 'என்றான்' என்பதனோடு முடிகின்றது. இந்த 'என்றான்' என்பதன் எழுவாய் இதன் முந்திய பாட்டுக்களிற் கூறப்பட்டிருக்கிற வசிட்டன்.

இப்பாட்டின் பின்னிரண்டடி "ஊழிற் பெருவலி யாவுள" என்னுங் குறட்கருத்தைத் தழுவியது. ஆலோசனையாளருள் சாதாரணரான ஒருமுகத்தினரெவருமொழிய, விசேடமானவனாய் நான்குமுகங்களுடைய ஒருவனே சூழ்ந்தாலுமென்பார் 'நான்முகத்தொருவன் சூழினும்' என்றாரெனலாம். அதனினும் அதிகப் பொருத்தமாக, விதியை விதிப்போனாய் 'விதி' யென்னும் பெயருடையானான பிரமனே விதியை மாற்றுதற்குச் சூழ்ந்தாலுமென்பார் 'நான்முகத்தொருவன் சூழினும்' என்றாரெனலாம்.

276. வெவ்வினை யவள்தர விளைந்த தேயுமன்
றிவ்வினை இவன்வயின் எய்தற் பாற்றுமன்
றெவ்வினை விளைந்ததோ? எவர் எண்ணமோ?
செவ்விதென் றொருமுறை தெரியும் பின் என்றான்.

இ-ள். (இராமன் காட்டுக்குப் போகும்படியான) இந்த வினை, (முன் எப்போதும் நற்செயலுடையாளாய் இப்போது) கொடிய செயலுடையாள் (ஆகத்தோன்றும் கைகேசி) விளைவிக்க விளைந்துமன்று; (புண்ணிய புருடனான) இந்த இராமனிடம் அடையற்பாலதுமன்று; (இவ்விருவரும் உத்தரவாதிகளல்லாத) எந்தவினையின் விளைவோ?; (தேவர்களுள்) யாவர் கருதியதோ?: (இது, இப்போது நிகழ்ந்த ஒரு வகையில், தீயதாகத் தெரியப்பட்டாலும், இனி நிகழும் மற்று) ஒரு வகையில் நல்லதென்று பின்பு தெரியப்படும் என்று எண்ணினான் (வசிட்டன்).

வயின்-இடம். செவ்விது-செம்மையானது-நல்லது. முறை-வகை (புறப்பொருள்வெண்பாமாலை). என்றான், என்று கூறினானென்ற பொருள் பயவாது, என்றெண்ணினான் என்ற பொருள்படநின்றது. எனல், என்றுகருதல் என்ற பொருளில் 'உள்ளத்தாலுள்ளலும்' என்றகுறளில் வருதல்காண்க. 'செவ்விதின்' என்பதும் பாடம்.

இயற்கையாகக் கைகேசி இக் கொடுவினை யிழைக்கும் இயல்பினளல்லள். அவளைக் கருவியாகக்கொண்டு இது செய்யப்பட்டிருக்கிறது.

தீயாருக்குத் தண்டனையாகச் செய்தற்குரிய இது மிகவும் நல்லவனான இராமன்றிறத்திற் செய்யப்படுதற்குரியதன்று. இது இவ்வுலகில் நிகழ்தற்கேதுவாக, அவ்வுலகில் யாது நிகழ்ந்ததோ? இங்கேயுள்ளா ரெவருடைய எண்ணத்தாலும் இது நிகழ்ந்ததில்லை. இங்கே இது நிகழும்படி அங்கே யாவர் சங்கற்பித்தாரோ? தீமையாகத் தோன்றும் இது நன்மைக் கேதுவானதென்று பின் காரிய நிகழ்ச்சியில் தெரியப்படு மென்று "அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை-மலையென விழிதுயில் வளரும் மாமுகில்-கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பனென்-றுலைவுறும் அமரருக் குரைத்த வாய்மையை" முன் "மனத்திலெண்ணினான்" ஆன வசிட்டன் இப்போது மனத்திலெண் ணினானென்று இப்பாட்டின் கருத்தை விரித்துரைக்கலாம். (திரு அவதாரப்படலம் ரு, கூ-ம் பாட்டுக்களைப் பார்க்க)

[மேற்கூறியவாறு எண்ணிய வசிட்டன், இராமனை அணுகி "நீ காடு செல்வையேல், அரசன்வாழான்" என்றான் இராமன் "அரசனாணைப்படி நடத்தல் என்கடன்: அவன் சோகப்படல் துடைத்தல் உன் கடன்" என்றான். முனிவன் "அரசன் உன்னிடம் 'காட்டுக்குச் செல்'லென்று சொல்லவில்லை. சொல்வேனென்று ஆலோசனையின்றிக் கைகேயியிடம் சொன்னதுண்டு" என்றான் இராகவன் "என் தந்தை தந்த வரப்படி செய்யும்படி என் அன்னை என்னை ஏவினாள். அந்த ஏவலை யான் சிரமேலேற்றுக்கொண்டேன். தருமசாட்சியாயுள்ள நீ தடுக்கலாமோ?" என்றான். வசிட்டன் மாறுகூற மார்க்கமின்றி வாளா நின்று கண்ணீர்வார்த்துக்கொண்டிருந்தான். அவனை வணங்கி இராமன் அரசமாளிகைமுற்றத்தை அடைந்தான்.

மரவுரி உடுத்து இளையவன் தொடரவந்த இராமனைக் கண்ட தாயர் முதலிய மாதர், முகங்கள் தாமரைமலர்களாகக், கண்கள் அம் மலர் களின்மேல் மொய்க்கும் வண்டுகளாக, அவ் வண்டுகளைக் கைகளா லறைந்து ஓட்டுவார்போல (வும் இக் கொடிய காட்சியைக் காணும் பாவத்தைச் செய்தீர்களேயென்று கோபித்துத் தண்டிப்பார் போலவும்) கண்கள்மீது கையாலறைந்தார்கள். சிலர், உயிர் சலனமுற்று நிலையில் நிற்கப் பெறாராய்க், கண்டோர் 'இவர்க்கு உயிர் இப்போது போய்விடும், இப்போது போனது, இப்போது திரும்பியது' என்று சொல்லும்படி

யானார். திக்கத்தாற் சாம்பிய மாதர்வதனங்கள், அவைகளுக்குத் தோற்றிருந்த சந்திரனுக்குத் தோற்றன. அவர்களுடைய அளவிறந் தலறி யழுத குரலை முன் தோல்வியுற்றிருந்த குழலோசை வென்றது. அரண்மனை மாதர்களெல்லாம் கொடுமையான காடோ குமாருக்கு உறை விடமானதென்று அழுவாராய் வாய்திறந்தவண்ணமாயிருந்ததனால், (வண்டுகள் உள்ளிருந் தொலியாநிற்பப்) பகற்காலத்தில்மலர்ந்த செவ்வல் லிப்பூநிறைந்த தடாகத்தை ஒத்தது அரசமாளிகை. அங்கிருந்தமாதர் கண்ணீர் மழை, தனமலைமேல்விழுந்துபெருகிப் பூமியில் ஆறாய்ஓடியது.

இராசக்கிருக முன்றிலை எய்திய இராமன், தன்னை அங்கு நின்று தாயர் தொடர்ந்து பின்வர, அவர்களிடம் யாது சொல்வதென் றறியா னாய்த் தன்மாளிகைநோக்கிச் சென்றான். அவ்வாறு செல்வதைக் கண்டோர், செம்பொன் முடிசூடுதற்குத் தேர்மீது சென்ற தெருவிலே தானே மரவுரி யுடுத்துத் தரைமிசை நடக்கக் கண்டும் பிளந்திடாத நமது நெஞ்சினும் வலியது ஒழிந்திடாத உயிரென்பாரும், நாடாள மகுடம் முடித்துவருவதைக் காணவிரும்பிய கண்களால் காட்டுக மரவுரியுடுத்துச் செல்வதைப் பார்க்கும்படி பெண்கொடுமைபுரிந்த இந்த நாட்டிலே, கண்கொடு பிறந்தது கட்டத்துக்கே யென்பாரும், காட்டுக்குப்புறப்படக் கண்டு தடுத்திடாமலும் கூடச்செல்லாமலும் உள்ள நம் அன்பு அழகிது! அழகிது!! என்பாரும், தானும் மரவுரி யுடுத்து இலக்குமணன் ஒருவனே, துன்பம் உருவெடுத்துத் தொடர்ந்தாற் போலத் தொடர்ந்து செல்கின்றான், இப் பெருநாட்டில் இவன் ஒருவன் தானே இராமனுக்கு உறவு என்பாரும், அங்கவீனரான ஒருமகனொழிய மற்றுப் பலமக்கள் குறைவற்றவராகவுடையவர் அந்த ஒரு மைந்தனுக் குத் தீங்குநேர்ந்தால் புதைத்தடுத்தற்கு உயிரையுங் கொடுக்க முந்தும் இந்த உலகிலே, அரசரனைவரையும் வென்ற பரசுராமனை வென்ற சம் பூரணனை மகனை காடு செல்லாதபடி காவாமல் தன் வார்த்தை பொய் யாதபடிகாக்கும் மன்னர்மன்னன்மனம் வன்மைபான இரும்பே யென்பாருமாயினர்.]

277. திக்கு நோக்கிய, தீவினைப்பயன, எனச், சிலரை
நெக்கு நோக்குவோர், நல்வினைப் பயன, என, நோவோர்,
பக்கம நோக்கல் என?; பருவால் இன்னம் ...
ஒக்க நோக்கிய யோகரும் அரும துயர் உழந்தார்.

இ-ள். தீவினைப் பயன்கள் (தம்மை நாடி அடையத் தாமிருக்கும்) திசையை நோக்கின என்று (அவை வருங்குறிகளாலறிந்து) மனம் நெக்குடைந்து (அப் பயன்கள் தம்மை அடைய வருதலை வெறுத்து) நோக்குவோர்களும், நல்வினைப் பயன்கள் (தம்மை நாடி அடையத் தாமிருக்கும் திசையை நோக்கின) என்று (அவற்றை விரும்பி எதிர் கொண்டு வரவேற்றுச்) சந்திப்போர்களுமான (இருதிறத்த)வர்கள்பால் (இராமன் காடேகல்பற்றித் துன்பம் மிகுதலைப்) பார்ப்பானேன்; இன்பம் துன்பம் இரண்டையும் ஒருநிகராகக் கருதும் யோகியரும் (பொறுத் தற்கு) அரியதுன்பத்தினால் வருந்தினார்கள்.

'திக்கு நோக்கிய' என்பதை 'தீவினைப்பயன்' 'நல்வினைப்பயன்' என்ற இரண்டுடனும் இயைத்துத் 'தீவினைப் பயன் திக்கு நோக்கிய என' என்றும் 'நல்வினைப்பயன் திக்கு நோக்கிய என' என்றும் கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது காண்க. "பல் ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று—வல்லதாம் தாய்நாடிக் கோடலை:—தொல்லைப்—பழவினையும் அன்ன தகைத்தே தற் செய்த—கிழவனை நாடிக் கொளற்கு" என்பது பற்றி வினைப்பயன்கள் வினைசெய்தார் இருந்த திசையை நோக்கின என்று கூறப்பட்டதென்க.

[மேற்கூறிய பயனை விரும்பாத யோகியர் துன்புற்றதன்றி இராமன் வனம் சேர்தலால் இராவணாதியர் அழிந்து துன்பந் தொலையும் பயனடைபவரான தேவர்களும, யாங்கள் எப்பயனும் எய்தாதொழியினு மொழிக, இத்துன்பத்தை ஆற்றேம், இராமன் வனம் ஏகாநுகவென்று விரும்புமாறு, அவன் வனம்செல்லக்கண்டார் துக்கம் உச்சநிலையையுற்றது. இராமன் பிரிவால் உயிர்பிரியும் தசரதன்போல, ஆவி நீங்குவதுபோன்றது அயோத்திமாநகரம். எல்லாருக்கும் ஒருயிர்போன்ற இராமன் சீதையிருந்த இடத்தை அடைந்தான். அவனை மரவுரியுடையானுகப் பார்க்கவே, சீதை திடுக்கிட்டெழுந்தாள். அவளை மாமிமார் தழுவிக்கொண்டு அழுதார்கள். அவள், கண்ணீர் பெருக, நாயகனை நோக்கி "இது அரசன ஆணையோ? இதன் காரணம் யாது?" என, அவன், "என் தம்பி அரசாள்வான். யான் இருமுதுகுரவரும் இட்ட கட்டளையை ஏற்று வனம்போய் வருவேன். வருந்தாதே" என்றான்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# மேல்புலக்கல்விமுறைகள்.

## II. மாண்டிஸோரிமுறை.

### IX. மனோராஜ்யம்.

இப்பகுதி ஆங்கிலத்தில் ராயல் 16-பக்க வளவில் 117 பக்கங்கள் கொண்டதாயினும் அத்துணை முக்கியவிடயங்களையுடையதாகத் தோற்ற வில்லை. ஆகையால் அதனைச் சுருக்கி யீண்டு வரைகிறேன்.

அறிவுநூலின் உற்பத்திபாகம் 'உள்ளது' என்பதனை அடிப்படை யாக வுடையதென்பது; ஒரு நூற்றண்டுகட்கு முன்னர்ச் சென்னைமா நகரம் எண்ணெய் விளக்குகளில்லாமல் பட்டினமுழுவதும் சோதிமயமாக விருக்குமென்றுவது லந்தன்மாநகரத்தில் நடக்கும் செய்தி அன்றுடம் ஆகாசமார்க்கமாகச் சென்னையில் தெரியுமென்றுவது நடுக்கடலிற் காற்று லலைப்புண்ட ஒருமரக்கலம் பாறைகளிற்றட்டி உடையுங்காலத்து உதவியை நாடுவதை யதேகடலிற் செல்லும் வேறு மரக்கலங்கள் அறியு மென்றுவது சொல்வோமானுல் சொல்பவர்களைப் பெரும்பித்தர்களென்று பலரும் நகையாடியிருப்ப ரென்பது நிச்சயம். இதற்குக் காரணம் இக் காலத்திலுள்ளார் அறிவுநூலால் (சயன்ஸ்) மனோவிசால மடைந்து ஒன்றினமே லொன்றுக உள்ளதை வெளிப்படுத்திச் செல்லுகின்றனர். பண்டைக்காலத்தவரோ அது அது தன்னீர்மைப்படி நடக்குமென நினைந்து கவலையற்றிருந்தனர். இதுதான் நமக்கும் பழங்காலத்தவர்க்கு முற்ற வேறுபாடு.

ஆயினும், மக்கள் பயனடையா வீணெண்ணங்களில் தம்மனத்தைச் செலுத்துவார்களானுல் அவர்களைச் சுற்றியிருக்கும் பொருள்களிலும் மாறுபாடு உண்டாவதில்லை. அங்ஙனமின்றி உள்ளத் தத்துவவிசாரணை புரிவோமாயின் அப்பொருள்களின்றத்துவங்கள் நம்மனத்திற்பட்டுக் கண்ணுக்குத் தோன்றி உண்மையாகிப் பயனடைகிறது. அதுவும் உள்ள ஒருபொருளிலிருந்து நுணுகியாராய்ந்து கொண்டு போவோமானுற் றான் புலப்படும். உள்ளதைவிட்டு யோசனை செய்யு மனத்தின் றெழில் பெருவெளியிற் செய்த வேலையாகும்.

இதனால் கற்பனைவேண்டுமென்றாகிறது. ஆயினும் அதற்கும் ஏதோ கொஞ்சமாவது உள்ளது வேண்டும். ஒருபொருளை ஊன்றி மாத்திரம் நோக்கினாலும் உண்மை புலப்படாது. கம்பன், புகழேந்தி, சேக்கிழார், இளங்கோவடிகள், சாத்தனார் முதலாயினார் கற்பனைகள் அனேகஞ் செய்திருக்கின்றனர் என்பது உண்மையே. அவைகள் மிக அதிசயிக்கத்தக்கனவென்றாலும், அவர்கள் இயற்கையையூன்றிநோக்கியதன்றி அதன்மேல் ஒருவனுக்கு உண்டாகவேண்டிய உணர்ச்சி இப்படிப் பட்டதாமெனக்கூடக் காட்டுவார். இதுவரைபிற்றான அவர்களுடைய கற்பனாசக்தி. இச்சக்தியை ஆக்கல் என்றுகூடக் கூறலாம். ஆக்கல் என்பது இருப்பவைகளைச் சோததல்; அல்லது பொறிகளின் வழியாக உளத்தையடைந்த மூலப்பொருள்களின்மேற் கூட்டுறவு செய்யப்பட்டதொரு பிண்டமெனபோம். ஆயினும் பெருமக்களாகிய இக்கம்பர் முதலாயினார் உள்ளதைக்கொண்டு பெருக்கவுரைத்தனரேயன்றி இல்லதைப் புனைந்துரைத்தாரில்லை. ஆயினும் கவிகளும் ஓவியர்களும் ஐம்புல னுகர்ச்சியின்றி யதன் காரியமான பஞ்சதன்மாத்திரைகளி னுகர்ச்சியா லெல்லாவற்றையு மறிகின்றனர். ஏனையவர்களோ பொறிவாயிலா னுகர்ந்து காண்கின்றனர். இதுதான் இவர்களுக்குள் உண்டாகும் வேறுபாடு.

இனிப்புலவர்களையொழியத் தத்துவப்பரிசோதகர்களோ இவ்வொரு பொருளின் மூலம், உற்பத்தி, செய்கை முதலியவைகளைப் பன்னாள் உள்ளத்திலே சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகின்றனர். [இவ்வாறு கண்டு கொள்பவர்களை ஆதியில் சித்த புருடர்களென நமது முன்னோர் பெயரிட்டழைத்தனர். இப்பொழுது வீரம் என்றதொரு மூலப்பொருளைச் செய்வகையால் பித்தளையிற்றேய்க்க அது சுத்தவெள்ளியின் தன்மையை யடைந்ததை யான் நேரிற் கண்டேன். அதனைச் செய்து காட்டியவர் இன்னும் சிறிதுபொழுது அம்மருந்தைப் பித்தளையிற் றேய்த்து வேண்டிய சூடு கொடுத்தால் அதன் புதுக்குணம் மாறாதென்றனர்.

குழந்தைகளின் மனோராஜ்யம்:— சாதாரணமான ஜனங்களுக்குள் சிறுகுழந்தைகளுக்கும் மனோவிசாலமுண்டென்பது ஒருகொள்கை— இவ்விதமிருக்குமாயின் அப்படிப்பட்ட குழந்தைகளின் மனோவிசாலத்தை விருத்திசெய்யவேண்டியது நமது முக்கிய கடமை. ஆனால் அவைகளின் அறிவுக்கும் நமது அறிவுக்கும் அதிக வித்தியாசமுண்டு.

நமக்கு இன்னின்ன வரம்புக்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுண்டு. அவர்களுக்கு அப்படிப்பட்டதொன்றுமில்லை. அக்குழந்தைகள் பொருள்களைப் பிறழவுணர்தலுங்கூடும். நாம் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாது அருவருக்கும் அனேக காட்சிகளை அவர்கள் வெகு ஆவலோடு பார்ப்பதைக் காண்கிறோம். இதனைச்சிலர் நாகரிகமற்ற காட்டு ஜனங்களின் மனோபாவத்துக்கு ஒப்பிடுகின்றனர். அவர்களோடு இக்குழந்தைகளை யொப்பிடுவது தகுதியாகாது. இவர்களுக்குக் கல்வியறிவு ஏறவேற இவர்கள்கொண்ட பிழையான எண்ணங்களை மாற்றிக்கொள்ளுகின்றனர். இவ்விதமாக இவர்கள் செய்வதில் நியாயமான ஆக்கற்கற்பனைகளும் அமைகின்றன. ஆக்கற் கற்பனைகளாவது [creative imagination] இல்லதொரு பொருளுக்கு உள்ளதன் செய்கையைப் புகுத்தலாம். உதாரணமாக, குழந்தைகள் கழியல்லது ஏதாவதொரு பொருளின் மேலேறிக் குதிரைச்சவாரி செய்வதைக் காண்கிறோம். காட்டாமணக்குக்காய்களைப்பறிக்கத் தேர்முதலானவைகட்டி விளையாடுவதைக் காண்கிறோம் இவற்றாற் குழந்தைகள் அடையுமானந்தத்துக்கு அளவுண்டோ? இவைகளிலெல்லாம் மனோவிசாலம் எவ்வளவு உண்டாகிறதென்பதையும், இவைகளெல்லாம் வஸ்துக்களைப் பார்ப்பதாலுண்டாகும் பலன்களென்பதையுங் கவனிக்கவேண்டும். ஆயினும் அவர்கட்கு உண்மையற்ற, உண்மைக்குப் புறம்பான கதைகளைச் சொல்லி அவர்கள் மனத்தைப் பாக்கிற் செல்லும்படி விடக்கூடாது. அப்படி விடுவோமானால் கற்பனைச்சக்தி விருத்தியடைய வழியில்லாமற் போய்விடும் குழந்தைகளின் இயற்கையான கற்பனைக்குணம் கெட்டுவிடும். இந்தப் பிழையான வழியாலே மக்கள் தங்களாயுட்காலத்திற் பெரும்பாகத்தை வீணே கழித்துவிட்டனர்.

ஆனாற் சிலர் குழந்தைகளின் மனத்தைக் கட்டுக்கதைகளைக் கூறிப் பண்படுத்தினால் தெய்வபக்தியுள்ளவைகளாக விருக்குமென்கின்றனர். உள்ளதையே யெடுத்துச் சொல்லுவோமானால் குழந்தைகளுக்கு வெறுப்புண்டாகி அவைகள் ஆவலாக அவற்றை விரும்பாது என்கின்றனர். இந்தப் பின்கூறிய கூற்றை ஈசுரபக்தி யுடையவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. ஈசுரபக்தியோ நம்பிக்கையின்மேலுண்டாவது. அதற்கு மாறாக இப்படி இல்லாததொன்றைப்புனைந்துரைப்பதால் உண்டாகுமென்று சொல்லுவது பொருந்தாக் கூற்றாகும்.

இனி வயதுவந்த பிள்ளைகளின் கற்பனுசக்தியை எப்படி வளர்க்கிறார்களென்பதைக் கவனிப்போம். பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் தங்கள் கவனத்தை வேறுவழிகளிற் செலுத்துவார்களென்றெண்ணி ஜன்னல்களுக்குத் திரையிட்டுப் பிள்ளைகள் உபாத்தியாயரைப் பார்த்தபடியே இருக்கும்படி செய்யப்படுகிறது. அவர் என்ன சொல்லுகிறாரோ அதைத்தான் செய்யவேண்டும் கேட்கவேண்டும் என்பதால் உபாத்தியாயரே பிள்ளைகளிடத்திற் பிரதிபலிக்கின்றாரேயன்றி அப்பிள்ளைகளின் கற்பனுசக்தி வெளிப்படவில்லை. ஆனாற் சாதாரணமாக ஒரு கட்டுரை (வியாசம்) எழுதச்சொன்னால் அவர்கட்குச் சரிவர எழுதத் தெரியவில்லையென்றும் அதன் பாகுபாடு, போக்குமுறை (idea) முதலியன தெரியவில்லை யென்றும் முறைப்பாடுகளுண்டு. கட்டுரைகள் முதலானவை வரைதல் கற்றுச் சொல்வதன்று. அது தானேதோன்றினாலன்றி, மனம் பொங்கி எழுந்தாலன்றிச் சுவையுடையதாகாது. இக்கருத்தை யறிந்தார் யார்? ஒருகாலத்தில் கார்டூஸி (Carducee) என்ற கவிஞனை ஒரு சரமகவி பாடும்படி கேட்டபோது அவர் அது தானாகவருவது; சமயத்துக்குத் தக்கபடி தோன்றுவதல்ல; மனது பதிந்தாற்றான் வருமென்றாராம். இம்மாதிரி விடைபகரக் கூடியவர் எத்துணைபேரிருக்கின்றனர்? ஆகையால் குழந்தைகளின் உளமும் விசாலமாவதற்கு அவர் தன்னிஷ்டம்போல் நடமாடும்படி செய்து அவர்களை அக்காலத்தேயே நல்வழிப்படுத்திப் பண்படுத்த வேண்டும்.

(முற்றும்).

இலக்கணவிளக்க பாரம்பரை

சோமசுந்தர தேசிகர்,

திருவாரூர்.

---

உ

சிவமயம்.

# கீழ்வேளூர் உலா.

## முன்னுரை.

பிறை நிலாவிய சடையிடைக்கொன்றையும் வன்னியு மிளிருங் காளகண்டத்தெம்மான் கோயில்கொண் டெழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றுள்ளே பரவையார்பாற்றூது நடந்த சேடுலாவிய கங்கையைச் சடையிடை வைத்தவனது திரு ஆரூருக்கு அணிமையிலுள்ளது கீழ் வேளூர் என்னுந் திருப்பதி. ஈண்டுக் கோயில்கொண்டெழுந்தருளிய பெம்மானுக்கு ஆளுங்கோ, கேடிலி, இலந்தைவனநாதர், அட்சயலிங் கம் என்று பலதிருநாமங்களுண்டு. ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசின் திருப்பதிகங்களையுடையதாயும், முடிபுனைந்து செங்கோலோச்சி வெண்ணிலாமிகு விரிசடையானிடத்து மாறா அன்பு பூண்ட கோச்செங்கட்சோழநாயனாரது திருப்பணியுடையதாயுமுள்ளது.

இப்பெருமான்மீது பலகாலங்களில் பலகவிகளைக் கேட்போர் நகையும் உவப்புமடையப் பாடுந்திறமை மிகுதியுற்ற அந்தகக்கவி வீரராகவ முதலியார் உலா நூல் ஒன்று பாடியுள்ளார். இதற்கணித்தான திருவாரூரின்கண்ணே கோயில்கொண்ட வீதிவிடங்கப் பெருமான்மீது பாடிய உலாவைக்கண்ணுற்றோர்க்கு இந்நூலின் அருமைபெருமைகளை எடுத்துச் சொல்லவேண்டுவதின்றாம்.

ஆயினும் இவ் உலாநூல் முழுதும் கிடைப்பதரிதாவதோடு இருக்கும் பிரதிகளும் இறக்கவாரம்பிக்கின்றன. அவ்வாறு சிதைந்துபோகாமலிருத்தற்பொருட்டு அரிவைப்பருவத்தில் ஒரு பகுதியோடு நிற்கும் இக்குறைநூலைச் செந்தமிழ் மூலமாக வெளியிடுகின்றேன். குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாம்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

சிவமயம்.

# கீழ்வேளூர் உலா.

## காப்பு.

ஏருலா முக்கண் ணிலந்தைவன நாதர்க்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே—நேரலரை
யெய்விலாழிக்கன்றே யேந்தினேன் மால்மருகன்
கைவிலாழிக்கன்றே காப்பு.

## அவையடக்கம்.

கேடிலார் கீழ்வேளூர் கீர்த்தியள விட்டெளியே
னீடுலாப் பாட நினைக்கின்றேன்—கோடிவட
தீயருந்தி னானுஞ் சிறுகாத தண்கடலோ
ரீயருந்தி னுலா மென.

## நூல்.

1 பரிதி மதியுமிரு பாணியணிந் தோனுஞ்
சுருதி மலர்க்கமலத் தோனும்—கருத
2 மெமையா ளுடையா னிமாசலத்திற் செய்யும்
உமையாண் மணத்திரளி னுள்ளார்—சுமையால்
3 அருத்தி வடபா லழுந்தா து தென்பால்
இருத்து மெனக் கும்பசனை யேவக்—கிரித்த னுவா!
4 எவ்வழி நின்மணத்தை யான்காண்ப தென்றிரங்கச்
செவ்வழிநீர்ச் சென்னி திருநாட்டின்—மெய்வழியிற்

---

1. பரிதி-சக்கரம். மதி-சங்கம். மகாவிஷ்ணு. 2. உமையின் திருமணம். 3. கும்பசன்-அகத்தியமுனிவன். உருப்பசியின் போகங்கொள்ளவந்த மித்திரன் என்னும் விண்ணவன் போகநுகர்ந்துகொண்டிருக்கையில் மேல்கடலொலி உருப்பசி காதில் விழுந்தது. அதன் எழிலைகாண அரம்பைமாது செல்ல விண்ணவன் விந்துகுலைய நின்றான். அதனைத்தெய்வகும்பத்தினூடே செலுத்தினன். அது பத்துத்திங்கள்கழித்து அகத்தியமுனிவனை ஈன்றது என்னும் திருமழவாடிப்புராணத்தி அகத்தியச்சருக்கம். 4. கிரித்தனுவா:விளி. மலையை வில்லாகஉடையவரே.

5 போந்த கமலா புரிக்கரை யோசனையிற்
சேர்ந்த ஞெகிழித் திசையின்கட்—பூந்தேன்

6 சுவடொன் றருவி சொரிசித்ர கூடக்
குவடொன் றதற்குக் குடபால்—சுவையமுத

7 தீர்த்தங் கடையத் தெறிதிவலே யொன்றிலொரு
மூர்த்த விலங்தை முளைத்துளது—நீத்தோய்

8 அருகு நிழலா மதனதுவித் தாலே
பெருகு வனமாய்ப் பிறங்கும்—திருமணமும்

9 காட்டுவே மங்கெனலுங் கஞ்ச மகநாகம்
பூட்டுங்கோ வைத்தொழுது போம்பொழுது—வேட்டவனுக்

10 கோது மலேத்தலேயி ஞேரிலிங்க மாயிலிங்க
மீது வதுவை விதிதந்தோன்—ஓதும்

---

5. கமலாபுரி - தெனகமலே, திருவாரூர் என்பது திவாகரம். ஞெகிழித் திசை-அக்கினமூலே. 6. சித்திரகூடகருவடு : நாகபட்டினத்துக்கு அருகில் இருக்கவேண்டுமென்று காண்கிறது. மறைசையில் மலேயுண்டென்று புராணம் கூறும். திருச்சிக்கலநாதருக்கு வெண்ணெய்பபெருமான், நவநீதநாதர் என்ற பெயருண்டு. 7. 'சுவையமுததீர்த்த மகடையத்தெறிதிவலே' என்றது அமிர்தங் கடைந்த வரலாற்றைத் தெரிவிக்கிறது. இதனே

'நீர்பூத்த பூவில் நிலாவுந் திருமுயங்கு
மேர்பூத்த பூணகத் தெங்கோனும்—தார்பூத்த
வண்ணக் கிரீட மகபதியும விண்ணவரு
மெண்ணற்ற தானவரு மெய்தியே—மண்ணற
சிறந்தபா லாழி சிதறக் கடைந்து
பிறந்தவமு தங்கடத்திற் பெய்து' என்ற திருக்கடை
யூர் உலா அடிகள் நன்கு வலியுறுத்துகின்றது.

7. நீத்தோய்-அகத்தியமுனிவ. 8. பதரிவனம்-இலந்தைவனம். 9. கஞ்ச மகநாகம்-பதுமன். 10. அகததியமுனிவருக்குத் திருமணக்கோலம் காட்டியதாக மறைக்காட்டில் ஐதீகமுண்டு. ஆண்டு மறைககாட்டிசருக்குபபின் மணவாளக் கோலம் இருக்கிறது. அப்பாசுவாமிகள் தேவாரமும 'மறைககாட்டுறையு மணு ளன்ருனே' என்று கூறும. வேதாரணிய புராணம் மணவாளசசருக்கம் பார்க்க.

11 அலையை யுகந்தோன் அருச்சிப்பக் கூத்தின்
நிலையை யிரட்டித்து நின்றேன்—தலைமை

12 யிழைக்கின்ற சித்திரகூ டேசனெனத் தேசம்
அழைக்கின்ற பேரொளி யானேன்—தழைக்கின்ற

13 வண்ணப் பதரி வனநாத ரென்றுலகம்
விண்ணப்பஞ் செய்ய வெளிப்பட்டோன்—உண்ணெகிழ்ந்து

14 கந்த னொருவன் கடற்சூ ரனைக்கடிந்த
பந்த வினையனைத்தும் பாறுதற்கு—வந்து

15 பதரி வனமருங்கிற் பண்டகர மைந்து
மதுரியதன் னாமத்தால் வைத்துக்—கதிபாயும்

16 ஆளி புறந்தாங்கு மஞ்சுவ்ட்டத் தம்மையெனுங்
காளி புறங்காக்கக் கற்பித்து—மீளப்

17 பிரம சரியம் பிடித்தொருதன் வேலாற்
பரமனெதிர் புஷ்கரணி பண்ணி—அருமைத்

18 தவஞ்செய்து பாவந் தவிர்த்துவனம் போக்கி
நவஞ்செய் பதிவிதித்த நாளில்—உவந்தமரர்

19 விண்ணகத்தூர் மேல்வேளூர் வீரவே ளூக்கிந்த
மண்ணகத்தூர் கீழ்வேளூர் மற்றென்றும்—புண்ணியத்தின்

20 பொய்கை சரவணப்பூம் பொய்கையென்றும் பூமாரி
பெய்கை தரவிருந்த பெண்பாகன்—வையகத்தைக்

21 கொண்ட வெழுகடலுங் கொள்ளாப் பதியிதென
அண்டர் பிறரு மருந்தவரும்—கண்டு

22 சரண மெனப்பூ சரண புரியாய்
அரண மளித்தருக ராளன்—பிரளயத்தால்

---

11. வருணனுக்காகக்கூத்தை இரட்டித்ததுகதைவிளங்கவில்லை. தெரிந்தவர்கள் எழுதவேண்டுகிறேன். 14. கந்தனொருவன்-ஒப்புமையற்றகந்தவேள். 15. அகரம் ஐந்து கோயில், கடம்பனூர், அகரக்கடம்பனூர், பெருங்கடம்பனூர் முதலியன. கீழ்வேளூருக்கு அணித்தானவை. 16. ஆண்டுள்ள காளிகாதேவிக்கு அஞ்சுவட்டத்தம்மையென்று பெயர் இன்றுமுளது. 17. கோயிலுக்கெதிரில் கீழ்புறம் சரவணப்பொய்கையுளது. 21-22. இதுபோன்றே சீகாழியும் பிரளய காலத்தில் நீரில் அழுந்தாதபதி எனபர்.

23 எங்குங்கே டுண்டாயு மித்தலங்கே டின்மையால்
தங்குங்கே டில்லா தவனானேன் — அங்காக

24 நீடா யிரம்படத்தா னீண்ட வடமேருக்
கோடாயிரம் புதைப்பக் கோதைபோய்ச் — சாடித்து

25 மாற்று மொருபடீ வாங்குவாங் கென்றுசிவன்
சாற்றுமி ந சொல்லளவுந் தாழ்த்தற்கு — வீற்றிருக்கும்

26 கோவிலின் மேல்பால் குளங்கண் டதன்கரையில்
மேவிலிங்க மொன்று மிகவகுத்துப் — பூவிலந்தைக்

27 கானத் திறைஞ்சக் கடிய வினைகளைந்து
ஞானத் தரிசனமும் நல்கினேன் — ஈன

28 நாக னுயிர்செகுத்த நள்வினைபோய் மாள
மூரகான்பூ சித்த முதலோன் — சுரர்குருவாம்

29 பொன்னை யிகழ்ந்தபவம் போகைக்கப் போதுதொழு
தென்னை விடுத்தி ரெனவிரப்பத் — தென்னாட்

30 டிலந்தைவனம் போதுகென யாகமும் வேட்பான்
மலர்ந்த கனலியொடு வந்த — பொலங்குலிசம்

31 கொண்டொரு கூபம் குறித்தவனும் பூசிப்ப
மண்டுதழ லோனு மடுவெடுத்து — விண்டலத்துக்

32 கோன்புரியும் வேள்விக் குறையறுத்து நாடோறும்
தான்புரியும் மாதவத்திற சாருதலும் — வான்புரியார்

---

23. கேடிலிநாதர் என்றதற்குரிய காரணம் கூறப்பட்டது. கீழ்வேளூர் ஆளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே என்பது அப்பர்சுவாமிகள் தேவாரம். 24. கோதை? 25–27. சிவபெருமான் வாங்கு என்ற மாத்திரத்தில் மற்றுமொருசொல்லுக்கு இடம்தந்த குற்றத்திற்காக கீழ்வேளூர் வந்து தீர்த்தங்கண்டு மூர்த்தி தாபிதது மோக்ஷமடைந்ததென்பர். மேல்புறம் கோவிலிருக்கிறது. கடவுள் திருநாமம் சேஷபுரியீசுரர். மேலைக்கோயிலென்றும் வழங்கும். 28. நரகாசுரனுயிர்வாங்கிய தீமைநீங்கப் பூசித்தமை தெற்குவீதியில் பெருமாள் கோயிலாக வழங்குகிறது. ஆயினும் மூத்தபிள்ளையும் முருகப்பெருமானும் துவாரத்திலுள்ளார். 31. இதிற்கண்ட கிணறு சரவணப்பொய்கையின் தென்கரையில் இன்றுமுளது. அரசாணிக்குளம் என்று வழங்குகிறது.

33 கோவுக் குறுவினையுந் தீர்த்துக் குழையுமெழு
நாவுக்கு வேட்டனவு காட்டினோன்—மாவச்ர

34 பாணியின்மால் யானைப் பதாகைத் திருநாளும்
பேணியபொற் கோவில் முன் பெற்றபிரான்—யாண

35 வருந்திருச் செங்கண் வளவ னளித்த
பெருந்திருக் கோயிற் பெருமான்—திருந்து

36 தரும புரவணிகன் சந்திர குத்தன்
பொரும வருந்துயரம் பூண்டு—பெருமிடியால்

37 வாடித் திரிகால மாசித்ர கூடத்தில்
ஓடித் திருக்கோயி லுட்புகுந்து—நீடி

38 யிளைத்த தடுமாற்றத் தீசனடி வீழ
வளைத்த பணிவாய் மகிழ்ந்து—களித்த

39 மனத்தை யவர்க்காக்கும் வண்ணமள கேசன்
தனத்தை யவர்க்காக்கும் தக்கோன்—துணித்தாங்

40 கிறுதிசெயத் தேடுமா டென்றறியா தன்று
வெறிதுகர நீட்டும் வினையான்—மறுபழிகருத்

34. கதைவிளங்கவில்லை. விசாரித்துவரப்படுகிறது. 35. கோச்செங்கட் சோழநாயனாரது திருப்பணியான மலைக்கோயிலையுடையது. 36-39. தரும புரம் என்ற ஊரிலுள்ளவணிகன் ஒருவன் சந்திரகுப்தன் எனு நாமத்தினன் பெருமிடியாலே துன்புற்றுவாடிய காலையில் இலந்தைவனநாதர் அவனுக்குக் குபேரனதுதிரவியத்தைக்கொடுத்தகதையைக்குறிப்பது. 40-45. ஒரு ஆட்டேன் விலைஞன் ஆடொன்றைத்தேடிச் செல்லுங்கால் ஆண்டிருந்த ஒரு முனிவரை வினவியபோது நிஷ்டாபரராயிருந்த அம்முனி வெறிதாகத் தன்கரத்தைநீட்ட அவ்வணிகன் அங்கே இருக்கிறதென்று எண்ணி அத்திக்கே சென்று அம்மறி யைப்பிடித்தான். அவ்வாறு அறியாமற் செய்தகுற்றத்திற்காக முனிவர் பின் னொரு சனனத்தில் அடிமையாகி ஒருவிலைமாதுவீடடைந்து வேலைசெய்து வரு நாளில் அவர் கையில் உணவுவாங்கிஉண்டு கைகழுவும்போது அந்நீர் அவ் விலை மாதின் தாய்மேற்பட அவளுக்கு நெடுநாளாகத்தீராதிருந்த நோய் நீங்கக்கண்டு இவரொரு மகானென்றெண்ணி அவரைப்பணிந்து அவரைப் பணியினின்று நீக்க இனி உய்யேனென்று மிடற்றை அறுக்கப்போகுந்தருணத்தில் இலந்தை வனநாதர் தோன்றி அவர் கையை மறித்தமையால் ஆளுங்கோ ஆயினர் என்ப.

11 தோற்றி யொருமுனிவன் சொல்லமறி வாணிகன்போய்
ஆற்றி யொருவ னறமனைத்தும்—கூற்றுவிழி

12 வாளூர் கணிகை மனையிலொரு காமுகற்கா
வேளூர் மறுகில் விலைப்பட்டு—நாள்கழிப்பான்

43 கைமே லருந்திக் கழுவுநீ ராங்கவள்தாய்
மெய்மேல் விழப்பழநோய் மீண்டதற்பின்—அம்மாது

44 பார்த்துப் பணியப் பணிதவிர்த்தா லுய்யேனென்
றூர்த்துத் தனதுமிட றுங்கறுப்பச்—சேர்த்திருகை

45 மாகையாற் பற்றி வலிதுதடுத் தாட்கொண்டா
ஞகையா லாளுங்கோ வாயினேன்—தோகை

46 வயிற்றி லிரண்டு மதியிற் கருவைத்
தியற்று மறையோ னிறப்பக்—கயிற்றணியும்

47 வாங்கிப் பிறந்தகம்போய் வைகி மகப்பயந்து
தாங்கித் தலைவன் றலத்தெய்த—ஆங்கவடன்

48 றுயத்தான் சோரத் தனயனிவ னென்னவவ
ணீயத்தா சான்றெனக்கு நில்லென்னத்—தாயத்தான்

49 பொய்ச்சூண் மொழிவான் புகழ்ப்பலிபீ டம்விலகக்
கைச்சூழ் மழுவெறிந்து கண்டித்தோன்—இச்சைதெளி

50 நாவார மூவர் நயந்து கனிந்தேத்துந்
தேவாரம் பெற்ற சிவாலயத்தான்—தாவாத

51 காயமே காயத்தான் கந்தரமே கந்தரத்தான்
மாயமே மாயத்தான் மாய்வித்தான்—தீயதொரு

52 மாமன் மகன்மேல் மகன்விடுத்தான் வந்துகொடுங்
காமன் கணைமேற் கணைவிடுத்தான்—நேமி

---

50. மூதவிமூவர் பாடலுடையது 51. காயம்: உரு; பின்னையது ஆகாயம். விண்ணே திருமேனி என்பது ஈண்டு கவனிக்கற்பாலது. கந்தரம்: மேகம். பின்னையது மேகம்போன்ற கறுத்தகண்டத்தையுடையானென்ற பொருளில் வந்துளது. 52. மாமன்: தச்சன். மகன் என்பது டோலியாய் மகனென்று நின்றது. பின்மகன், வீரபத்திரக்கடவுள். கணை - அம்பு; கண்ணை.]

53 அரிபால னங்க மரியாலன் றேவி
பரிபாலன் சைவபரி பாலன்—தெரிசித்தா

54 ரார்க்கு மகத்திருவை யாற்றினான் நால்வேத
மார்க்கு மகத்திருவை யாற்றினான்—ஏற்குமிடம்

55 பாணித் தமராம் பழனத்தான் காணாத
பாணித் தமரப் பழனத்தான்—வேணிக்குட்

56 போத வரவம் புலியூரா னின்றசிவ
போத வரவம் புலியூரான்—கோதண்டர்

57 வன்னி நிழற்கா மருகலான் மட்டவிழும்
வன்னி நிழற்கா மருகலான்—தன்னரையில்

58 வாசமா தங்க வனத்தினான் போற்றிசெயும்
வாசமா தங்க வனத்தினான்—நாசமெனுங்

59 காலம் பரவக் கடைமுடியான் செய்தொழும்பாய்
காலம் பரவக் கடைமுடியான்—மேலிரவி

60 மண்ணம் பகமா மயிலையான் கண்மணி
மண்ணம் பகமா மயிலையான்—கண்ணாருவாய்

61 வாவி முளரி வளைகுளத்தான் வெண்பணில
வாவி முளரி வளைகுளத்தான்—தாவின்

---

53. விஷ்ணுவைப்பாகத்திலுடையவன் அரி: தீ, பொன்-பொன்வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ணமென்பது. 54. மகம் + திருவை + ஆற்றினான். மக + திரு + ஐயாற்றினான். 55 தமரம்: ஒலி; ஒலியையுடைய பழமையான நந்து (சங்கம்). பாணித்து அமர் அப்பழனத்தான். 56. போத: மிகுதியாக. அரவு, அம்புலி ஊராநின்ற சிவபோத: வர; அம்புலியூரான். 57. இவ்வடிகட்கு வலிந்து பொருள்கொள்ளவேண்டியிருக்கிறது. மருகு, அலானைக் காப்பாற்றிய மருகலான், மருகல் - கல்வாழை. தலவிருட்சமாகவுள்ளது. 58: மா: இலக்குமி; தங்க வனத்தினான் போற்றிசெயும், மாதங்கவனத்தினான்: ஆனைக் காவான். 59. கடைமுடியான்: அழியாதவன், கடைமுடியூரான். 61. கண் ணருவாகச் சூழ்ந்து தீவளையும் நெற்றியையுடையவன். வளைநெற்றியையுடையவன். வளைகுளம்: ஊர்.

62 மருது திலதை மழுவை மிழலை
பரிதி மறைசை பறியல்—அருணை

63 சைலம் விளமர் தருமை மதுரை
கைலை புகலி கமலை—பயிலும்

64 அபய னனக னசல னமலன்
உபய வுருவி லொருவன்—நவையில்

65 பாத விருது பக்வ னகவன்
வரத ஞெருத மருகன்—விரதன்

66 அரக்கன் மிடுக்கி லடுக்க லெடுக்க
உரக்க னெரித்த வுரத்தன்—இரக்க

67 வெடுத்த சிரத்த னிடக்கன் வலக்கன்
அடுத்தவுச்சிக் கச்சிக் கணக்கன்—விடுத்தொழுகு

68 பச்சிரத்தப் பிச்சைபுக்க பத்மகைத்த லத்திலத்தன்
முச்சிரக்க னக்கணிச்சி முக்கணக்கன்—வச்செரித்த

69 வங்கம்மெண் துங்கங்கொண் டங்கண்டும் பண்கண்டுந்
தங்கம்பன் சம்பந்தன் றன்பந்தன்—பொங்குந்தி

70 ஓத மூலாமின் னுலாவு சடாதரன்
வேத முலாவு விசாலகன்—மாதவ

71 காயக ஞகம சாகரன் நான்முகன்
நாயகன் வானவர் நாயகன்—ஓயா

72 தலங்கு பொலங்கொம்ப ரம்பாமுந் திக்கு
மிலங்கு மிலங்தைவனத் தீசன்—துலங்கும்

---

62. திலதைப்பதி: பூந்தோட்டம் ரயிலடிமேற்கில் அரிசிற்கரையிலுள்ளது. மழுவாடி: இது போழ்துமழபாடி எனவழங்கும். 64. உபய உருவிலொருவன்: ஒருபாதி மால் கொள மற்றொரு பாதிஉமையவள் கொள என்பது நோக்கத்தக்கது. 65. ஒருதமருகன். 66.... 67. விருச்சிகன். 68. பச்சிரத்தம்பிச்சை புக்கது கந்தபுராணம் ததீசி உத்தரபடலம் 150—200 செய்யுள்பார்க்க. 69. கொண்டு அங்கு அண்டும் பண்கண்டு உந்து அங்கம் பன்னிய சம்பந்தன். 70. ஓதமூலாமின்—கங்காதேவி. 71. மாதவனுகிய அம்பு: பாத்தானை யிப்பக்கம் பலவானுனை......மாருத மாலெரிமூன்று வாயம்பீர்க்காஞ்—சாத்தானை (திருவீழிமிழலை-தாண்டகம் ௧) என்பதுநோக்கத்தக்கது திரிபுரதகனத்தில் அம்பானமை. 72. ஓயாமல்அசைகின்ற அழகியகிளைகள்எங்கும்மிளிரும் இலந்தைவனம்.

73 படாரசி நாகா பரணன் சரண
நடராசன் கேடிலா நாதன்—கடகளிற்று

74 மேனித் துவச மிசையேற்றி வீதியுலா
வானித் திருநாளி லாங்கொருநாள்—ஞானத்தால

75 தங்க ளிறைவர் தவமு மருச்சனையும்
பங்கமறச் செய்த பழம்பதியைச்—சங்கின்

76 றொருவாது போற்றுதலே யொப்பப் புலரி
யிருவா ரணமு மியம்பப்—பெருவான

77 மலருமொரு செவ்வந்தி வந்ததின்பின் பட்ட
அலரி முளைத்த வளவில்—மலைபயந்த

78 காதலையுங் கண்ணி கரைகடந்த வேட்கையெனு
மாதலையிற் பூத்த மணப்பாயில்—மீதின்பம்

79 தோய்ந்து திருப் பற்றி துறந்து வயிரநிறை
வாய்ந்த வசந்தமணி மண்டபத்துப்—போந்து

80 பயிலு மகன்பொய்கை மஞ்சனம் பைம்பொன்
குயிலு மணிக்குடத்தாற் கொண்டு—கைலை

81 நிறம்போய்ப் பசும்பொ னெடியவட மேரு
புறம்போர்வை செய்த பொலிவோ—பிறங்கும்

82 பவளச் சுவடு பனிவெண் படலம்
திவளப் பொதுளும் திறனோ—கவுரியெனு

83 மங்கை யுமையாள் வளையூ றொளித்தமையைக்
கங்கைபரி சித்தறியுங் காட்சியோ—வெங்கட்

84 கருங்களிற்றுத் தோல்போய்க் கவளத் தவளப்
பெருங்களிற்றுத் தோல்போர்த்த பேறோ—இருங்கண்

---

73. ராசி-கூட்டம். 74. யாண்டும்ஆனேற்றுக்கொடிபறக்க இத்திருப்பதியில் யானைக்கொடி எற்றுவது 34-ம் கண்ணி நோக்குக. 76. புலரி-விடியல்- இருவாரணமும்-சங்கும்,-கோழியும். 77. பட்ட அலரி-முன்மேற்றிசை மூழ்கிய கதிரவன். 78. காது அலையுங் கண்ணியொடுமாதலை. 80. ஞாயிலும் - செய்த. 81. கைலைநிறம் - வெண்மை. 82. திவள - மிகுதிப்பாடு. 83. உமையினது பச்சை நிறத்தைக்காணவில்லையென்று கங்கை கீழிறங்கிக் காணும் காட்சியோ. 84. யானையுரிபோய் வெள்ளானையுரி போர்த்ததோ.

85 ணெரியுருவச் சிம்பு ளெனச்சினத்த காலத்
தரியுருவை மொய்த்த வழகோ—தெரிவை

86 குழைத்தபிரா னுக்கிந்தக் கோலமென வெள்ளை
தழைத்ததிரு வொற்றுடை சாத்தி—எழுத்தெழுதா

87 வோசை மறையோ ருரைக்குஞ் சிவாகமத்தின்
பூசை பெரிது புரிந்ததற்பின்—தூசுகரி

88 வாமத் துறக்க வரையுமெழு தாலுமொரு
நாமத் திருக்காப்பு நாணணிந்து—பாமொழியில்

89 பக்கத்தின் பேருறுப்பில் பத்மரா கத்தொகுதிச்
செக்கர்ப்பொன் னுடை திகழ்வித்துத்—தக்க

90 வுயர்க் கனகத் தொருபே ருறுப்பில்
வயிரக் குலமவுலி வைத்துப்—பயிராய்ப்

91 படருந் தளிரிற படுபே ருறுப்பிற்
சுடருமணிக் குண்டலங்க டேக்கிப்—படியுலகைப்

92 பேணிக் கடல்முகந்து பெய்மேகப் பேருறுப்பின்
மாணிக்கக் கட்டு வடம்சாத்தி—ஆணி

93 வலியினது பேருறுப்பின் வாரிசொரி முத்தின்
பொலியுமிரு கேயூரம் பூட்டி—ஒலிபுனற்பேர்

94 சேருறுப்பிற் செம்பொற் செறிகடக மிட்டறிவின்
பேருறுப்பி லாரம் பிணைபிணைத்து—நார

95 மொழுகுந் திருப்பே ருறுப்பிற் பசும்பொன்
னெழுமுதா பந்தனமேல் வீக்கிப்—பழைய

---

85. சிம்புள் - சரபம். அரியுரு - நரசிங்கஉரு. 86. தெரிவை குழைத்த பிரான்-தழுவக்குழைந்தவர் - காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்தபடலம் பார்க்க. 89. பாட்டின் அரைப்பகுதி பக்கம்-பக்ஷம் இப்பேரை உடைய உறுப்பு-அரை. 90. சிரசிலே மௌலியை அணிவதென்பது உயர் அக்கனகம் என்று சிலர் பிரிக்கின்றனா. 91. பயிராயப் படருந்தளிர்-வள்ளி? 92. படிஉலகு-பூமியாகிய உலகு. வான்உலகுஎன்பதுபோல. மேகப்பேர் உறுப்பு-கந்தரம். 93. ஆணி-கீல். நண்டு தோளுக்கு ஆயிற்று. கேயூரம்-தோளணி. 94. புனல்-கமலம். புனற்பேர் உறுப்பு கமலமாகியகை. கடகம்-கையணி. 95. அறிவு: உள்ளம்: ஆர்ப்பு:பதக்கம்.

96 மருத்துவின் பேருறுப்பின் வண்டாளப் பந்தி
திருத்து திருச்சிலம்பு சேர்த்திப்—பொருத்து

97 திருக்கடுக்கை யும்பிறவும் செங்குவளைப் போதின்
சுருக்கெனத்திங் கட்புறத்துச் சூடி—எரித்தநாள்

98 வேளினங் கங்கரிய மெய்யிற் புகைதம்மைச்
சூழ நடுவிருந்த தோற்றமோ—மாழை

99 வடிவமதிற் பூசித்த மாலிந்த்ர நீலப்
படிவ நிழலெறித்த பண்போ—கடல்வாய்க்

100 காளத் திருநீல கண்டநிற மெங்கும்
புாளச் சுடர்வடிந்த போக்கோ—திாள்புயத்தை

101 மூத்த மகத்தழுவ மூரி ம்தவாரி
கோத்த கறைநிறைந்த கோலமோ—வாய்த்த

102 ? வகையிதெனத்தம்மையறியாமெய்க்கே
தகைய திருச்சாந்து சாத்தி—அகில்கமழுஞ்

103 சாந்தை முகிலென்று தாழிந் திரவிலெனச்
சேர்ந்த திருவா சிகைகோட்டித்—தோய்ந்த

104 இருவர் மனைவியரு மீன்றவிரு சேயு
மருவ வகுத்த வகுப்போ—பரிவால்

105 உரிமை யரவுக்கு மொண்புலிக்கும் வெவ்வே
றிருமை நடம்புரிய வென்றோ—பெருமறையின்

---

96. நாரம்-நாண். ஒழுகும்-புரளும. உறுப்பு-இடுப்பு. 97. மருத்து-காற்று கால். 98-102. திருச்சாந்து சாத்தியதன் வர்ணனை. 99. வேள்-மன்மதன். தோற்றமோ-காட்சியோ. 100. காளம்-கழுத்து. சுடர்-அழகு. 101. மூத்த மகவு - பெரியபிள்ளை. (கணபதி) கறை - கறுப்பு. 103. முகில் - மேகம். என்று நினைத்து இந்திரவில்வருவதாக என்று வருணித்தார். திருவாசியையும், சாந்தணியையும், மழையும் அக்காலத்துத் தோன்றும் வானவில்லுமாக உவமித்தார். 104. இருவர் மனைவியர் - பார்ப்பதி, கங்கை. 104-முதல் 106 வரை ஒருபொருள்குறித்த தொடர். 104. இரண்டுபிள்ளைகளும் தழுவும்பொருட்டு ஈருருக்காட்டி நின்றார் என்றார். 105. அரவு-பன்னகமுனி, பதஞ்சலி. ஒண் புலி - புலிக்காலோன் ; வியாக்கிரபாதர், 'இருவருக்கும் ஒருசேரக் காட்சிதந்தருளுவது அடாதென்றோ' என்ற எண்ணத்துடன் என்ற நயம் தோன்றக் கூறுகின்றார்.

106 நீட்டும் வடிவொன் றிரண்டாகி நின்றதெனக்
காட்டுநிழற் கண்ணாடி கண்ணாடி—நாட்டுபுகழ்ச்

107 சோணாட்டிற் காடாய்த் தொழுந்தொண்டை நாடென்னும்
வாணாட்டின் வெற்பாய் வருபாட்டும்—ஆணுருப்போய்

108 முந்து பனைபழுப்ப முன்னீரிற் கன்மிதப்பச்
சந்துசெலச் சொன்னோர் தமிழ்ப்பாட்டும்—வந்தொருபெண்

109 ஊமைத் திருவா யுரைப்பித் தவன்பாட்டுந்
தாமத் திருச்செவியிற் சாற்றியே—மாமணித்தண்

110 டேறித் தடக்கை யெடுத்த திருப்பிரம்பின்
மாறித் திரள்விலக்க வல்லோனும்—நீறணியுஞ்

111 செய்யதிரு மேனி தியானித் திருந்தெமது
கையதிரும் போதுணர்ந்து காண்போனும்—வையையின்பால்

112 விண்ணு யிரக்கதிரோன் வீர மகனருந்த
வெண்ணு யிரஞ்சமணை யிட்டோனும்—நண்ணாத

113 கூற்றுதையுந் தாளைக் குறித்துப் பொறித்தழல்வாய்
நீற்றறையில் மெய்குளிர்ந்து நின்றோனுஞ்—சாற்றுபதக்

114 கட்டுக் கவிபாடிக் கண்ட பொருளாற்றி
விட்டுக் குளத்தி லெடுத்தோனும்—வெட்டுதலை

---

106. கண்ணாடியைக் கண்ணனது நாடி. 107. சோணாட்டிற்காடு - வேதவனம்; வேதாரண்யம். வெற்பு - வேதாசலம்; கழுக்குன்று. வருபாட்டு - வேத ஒலி. 108. சம்பந்தர், அப்பர், சுந்தரர்முதலிய மூவர் தேவாரமும். 109. மாணிக்கவாசகர். 110. நந்தியெம்பெருமான் - வந்திறையடியிற்றாழும் வானவர் மகுடகோடி-பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையாற் றாக்கி- அந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பையாக்கு—நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல் வைப்பாம். என்பது ஈண்டு கவனிக்கற்பாலது. 111. சண்டேசன் - உலகவழக்கிற்செய்வதனை ஈண்டு அழகோடு கூறினர். எமனும் சண்டேசனாக ஒருகாலத்து அமர்ந்தானென்பது திருஆரூர்ப்புராணம். 112. சீகாழிப் பெருவாழ்வு. 113. திருநாவுக்கரசு 114. சுந்தரர் திருமுதுகுன்றத்தில் மணிமுத்த நதியிலிட்டுக் கமலாலயத்தில் எடுத்த கதை.

115 யோடு பிடித்தைய முண்டகான் கோனுக்கன்
றேடு பிடிக்க விசைத்தோனும்—பாடவல்ல

116 பத்திரனுக் காகப் பணித்த திருமுகத்தால்
கைத்திரவி யஞ்சொரிந்த கற்பகமு—மத்தெருவின்

117 ஆக்கன்றை யூர்ந்த வடுபழிக்குத் தோக்காலிற்
கோக்கன்றை யூர்ந்த குலத்தரசும்—மாக்கபமே

118 காவியை யீந்த கவிஞ ரிடைமருதில்
தேவியை யீந்த திசாபதியும்—பாவித்துப்

119 பூசிக்குஞ் சைவப் புனிதச் சுருதியரு
நேசிக்குந் தானமென நிற்போரும்—ஈசற்குத்

120 தேவர்பாட் டென்னுந் திருஞானத் தேனொழுகு
மூவர்பாட் டோது முனிவோருஞ்—சேவுயர்த்தோன்

121 முற்பகனூல் சொன்ன முறையின் னெறிதிறம்பாப்
பற்பலபே ருள்ள பரிகலமும்—கற்பதனூற்

122 சேவித் திருபாதச் செந்தா மரைபரவத்
தூவித் திருக்கோயிற் சுற்றகன்று—காவற்

123 றெருப்புகுந்து தேவர் திரள்முனிவர் வெள்ளம்
மருப்புகுது பூமாரி வார—நெருப்புண்கட்

---

115. தலையோடுபிடித்தையமுண்டவன் வைரவக்கடவுள். ஈண்டு சிவ பெருமான்மேற்று. எடுபிடிக்க இசைத்தவன், மணிவாசகப்பெருமான். 116. கைத்திரவியம்சொரிந்த கற்பகம் கழறிற்றறிவார் நாயனூர் எனும் சேரமான்பெருமாள். 117. மநு பெரியபுராணம் திருவாரூர்ச் சிறப்பு. 118. பாண்டியன் இடைமருதுலா............*வரகுணபாண்டியன் தன்னைப் பிடித்தபழி நீங்கியபின் அங்கேவதியுநாளில் தான்மணந்துகொண்டசோழ மன்னன் கன்னி 32 இலட்சணங்களோடு மிருக்கக்கண்டு அவளை அழைத்து வந்து மருதநாயனிடம் சேர்ப்பித்தார் என்பது புராணம்*. 120. தேவாரம் ஓதுவோர் என்பது புராணம் 121. சேவுயர்த்தோன்—இடபக்கொடியுடையோன். முற்பகல்நூல் சொன்ன ஆகமத்திற்கண்ட மருதவனப்புராணம் ௫௦ வரகுணச் சருக்கம். 122. திருக்கோயிற்சுற்றுப்பிரகாரம். 123. காவலையுடையதெரு. திரள்வெள்ளம். ஒருபொருளன. மரு - மணம்.

124 பூதக் கடலும் புறநின் றாகாவென்
றோதக் கடலு மொலியடங்க—மாதிகிரி

125 யோங்கு முழக்கா லுதகித் திரள்மணிக
ளேங்கு முழக்கா விடிக்குழாம்—தாங்கு

126 மிடித்தாக் கன்புவன மிட்டநவ ரத்ன
வடித்தார்ப் பொறியுரக வர்க்கம்—விடைக்கொடிமீ

127 தாடுகையாற் றென்ற லலங்குபிறை யாடிபல
சூடுகையாற் றிங்களுடு சூழ்முகடு—தோடசையு

128 நீட்சி முடியா நிலமளந்தோ னீளமென
மாட்சி தருந்திருத்தேர் வந்தேறிக்—காட்சியலங்

129 காரக் கடவுளர்தங் கைம்மூளரிக் கம்மதியி
னேரக் கவிகை நிலாக்கவிய—ஈருகும்

130 வீசுங் கவரி வெளுப்பாலெப் பாவையரும்
பேசுங் கலைமகளாய்ப் பேகிப்பப்—பூசித்தன்

131 றுலால சேடரெடுத் தாடுபடம் போலுபய
பாலால வட்டம் பணிமாற—ஞாலமெல்லாம்

132 பூத்தகொடி பார்த்தன் புணர்ந்தகொடி தம்பிறப்பின்
மூத்தகுடி யண்ட முகடோங்க—வத்தச்

---

124. தீப்பொறியையுடைய பூதகணங்கள்கூட்டம்; தீபோற்செவந்தவிழிகள் எனினுமாம். 125. படைகள் ஆரவத்தால் கடல்; மணிகள் ஒலியால் இடி. 126? 128. நீட்சிமுடியா விசுவரூபம் முடியாத நிலமளந்தோன் வாமனனை திருமால். 129 கைம்மூளரி கைமுகிழ்ப்பால் உண்டாய தாமரை. தாமரைகுவியப்புறப்பட்ட மதியெனக் கவிகைதோன்ற. 130. அருகு—பக்கம். சாமரையின் வெண்மையால் யாவரும் கலைமகளுருவையடைய. 131. ஆலகாலசேடர்; உபயபால்—இருபால். ஆலவட்டம் பணிமாற - திருவாரூர்உலா 116. 132. ஞாலமெல்லாம் பூத்தகொடி - பூமியைப்படைத்த பிரமதேவனது அன்னக்கொடி; பார்த்தன் - அர்ச்சுனன்; புணர்ந்தகொடி தம்பிறப்பு - மணம்செய்துகொண்ட சுபத்திரையின் முன்னவனை கிருட்டினன்; மூத்தகுடி - கருடக்கொடி. வேலைசருகொடியை மார்பகத்துக் தாமரைபுபக்கு ஞாலத்தெதிரு கொடியை வைத்தகொடியோங்க' என்பர் திரு. உலா 105.

133 சிறந்தே யிருபுட் சிரத்தாற் சரணம்
புறந்தேய் மழவிடைமுன் போதக்—கறங்குமத்

134 மூக்கட் கரிவதனன் மூடிகமுஞ் செம்மயிலு
மக்கட் கமலமுனி யன்னமும்—சக்கரத்தோன்

135 புள்ளு மொருபன் னிருவர் பொலன்றேரும்
துள்ளு பதினொருவர் தொல்லெருதும்—தள்ளா

136 விருவரோ ரெண்ம ரெழுவர் திசாங்கத்
தொருவர் விமானத் தொழுங்கும்—பரிபுரத்தாட்

137 கைக்காரி நாமத் தவர்ஞாளி யுங்களிறு
மைக்கார் மதனூரு மாருதமுந்—திக்காளர்

138 நாகமை மேதி நரமகர மீனிரலை
பாகமையும் புட்பகமும் பாயேறு—மாகமும்

139 பாரு நெருங்கப் பதினெண் கணத்துள்ளோர்
யாரு நெருங்க விருமருங்கு—நீர்மகளும்

140 பார்ப்பதியுந் தம்பதியைப் பார்க்குந் தொறுந்தமைத்தான்
சேற்பதியுங் கண்கள் சிவந்துவரக்—காற்பாதுமப்

---

133. இடபக்கொடி முன்னேசெல்ல என்பதுகருத்து, இடபக்கொடி மேலும் மற்றிருகொடிகளும் அதற்குச்சற்றுத்தாழ்ந்துஞ்செல்ல.
135. ஒருபன்னிருவர் - ஆதித்தர் பன்னிருவர்.-
[illegible]
[illegible]
[illegible] ॥ பதினொருவர்-ஏகாதச உருத்திரர்-அவராவார்-மகாதேவர், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன். 'காயுமருக்கர் இரதநீராறு முடிவெள்ளெருக்கர்பதினொருவரும்' என்பர் திருஉலா 107. 136 இருவர் - மருத்துவர். எண்பர் - அஷ்டவசுக்கள். எழுவர்-முனிவர் எழுவர்: 'மருத்துவராய் நீடிருவர் எண்மர், நிலாவொருவர், ஐம்முனிவரோடிருவர் என்பது திரு-உலா 108. 137. பைரவர், ஐயனார், 'பாடுமிருகாரிப் பெயரோ கருஞாளியும் களிறும்' என்பது திருஆரூருலா 109 பின்னடிதென்றல்.
138. நாகம் - யானை; மை - ஆடு; இரலை - மான். 139. ஆகம் - விசும்பு.
140. நீர்மகள் - கங்கை;